Analysis of fertiliser samples

***555 Q.**—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :—

(*a*) whether the Government have any proposal to establish a laboratory at Madurai Agriculture College to analyse fertiliser samples; and

(*b*) if so, the details there of ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) இது வேளாண்மைத்துறை இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது. இதுகாறும் செயற்குறிப்புகள் எதுவும் அரசுக்கு வரவில்லை.

Dr. H. V. HANDE : Sir, in view of the fact that even the Central Government have abolished the system by which mixed fertilisers can be sold and in view of the fact that the Hon. Minister for Agriculture gave an assurance that the matter would be examined—now there are a number of farmers who do not know which type of fertilisers should be used for what type of field and a particular type of fertiliser depends on the quality of the field—and in view of the absence of help from the concerned department of the Agriculture College, what is the method by which the Government propose to help the agriculturists in supplying the fertiliser required for different categories of lands? முற்பகல் 10–00

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விவசாயிகளுக்கு எந்த மாதிரியான உரம், எந்த அளவுக்குப் போடுவது என்பதைப் பற்றியெல்லாம் விஸ்தரிப்புப் பணியாளர்கள் அங்கங்கே சென்று அவர்கள் மத்தியிலே விளக்கவுரைகள், பிரச்சாரங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். உரங்களைப் பகுப்பாய்வு செய்து கலப்படம் இருக்கிறதா என்பதைக் கண்டறிந்து குவாலிடி கண்ட்ரோல், தரக்கட்டுப்பாடு செய்கின்ற வகையிலே அரசாங்கம் இந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறது. அதற்காகக் கோவையிலே உள்ள வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் ஓர் உதவி வேளாண்மை ரசாயன வல்லுநர், ஐந்து பகுப்பாய்வு உதவியாளர்கள், ஒரு சிற்றெழுத்தர், ஒரு கடைநிலைப் பணியாளர் ஆகியோரையும் வட்டார உர ஆய்வாளர்கள், மாவட்ட வேளாண்மைத் துணை அதிகாரிகள், நிலப்பரப்பு அதிகாரிகள் இவர்களைத் தவிர பல்வேறு இடங்களிலிருந்தும் மாதிரி உரங்களை வாங்கி கோயம்புத்தூர் ஆய்வுக்கூடத்திற்கு அனுப்புகின்றனர். பகுப்பாய்வு செய்து தவறு இருந்தால் சரியாக்கவும், சரியாக இருந்தால் நற்சான்றிதழ் கொடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதேபோன்று மதுரையிலும் உள்ள வேளாண்மைக் கல்லூரியிலே இந்தப் பணியாளர்களை நியமித்து பகுப்பாய்வு செய்வதற்கும் நல்ல உரங்களைக் கொடுப்பதற்கும் அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

வேர்க்கடலை உற்பத்தி

***556 வினா.**—திரு. பெ. மலைச்சாமி : மாண்புமிகு வேளாண்மை அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) வேர்க்கடலையின் உற்பத்தி, அமைப்புக் கூறுகளை ஆய்வு செய்வதற்கு கோவையில் ஆய்வு நிலையம் ஒன்று அமைக்கப்பெற்றுள்ளதா?

(இ) ஆம் எனின், அதன் விவரம் என்ன?